T-6370

தமிழ் வாழ்க.

தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

பதிப்பாசிரியர் : பாவலர் ச. பாலசுந்தரம்

திருவள்ளுவராண்டு - 2028

ஈசுவர — மார்கழி

ஜனவரி — 1998

துணர் : 71 **மலர் : 9**

தமிழ்ப் பொழில்

உள்ளுரை

1] அறிவு - பாவலர் ச. பாலசுந்தரம் 365

2] சேக்கிழார் காட்டும் கலைப் பண்புகள் 367
முனைவர் அ. கிருட்டினன்,
எம். ஏ., எம். எட்., பி. எச்டி.,

3] சுவடிப் பதிப்பில் வராங்கன் கதை
ஆய்வுகள் 371
முனைவர் பரிமளன், எம்.ஏ., எம்.ஃபில்.,

4] மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம் 383
முனைவர் சு. இராஜேந்திரன் எம். ஃபில்.,

5] காலந்தோறும் ஆயுதங்கள் 387
முனைவர் சு. சௌந்தரபாண்டியன்,
எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பிஎச். டி.

6] வந்தேமாதரம் 391
எஸ். சந்திரசேகர்

7] திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்
சுவடி ஆய்வு 399
மொ. மருதமுத்து, எம்.ஏ., எம் ஃபில்., எம் எட்,,

8] சமூக சிந்தனையாளர்கள் சித்தர்கள் 409
முனைவர் இரா. கலாவதி

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	3-00	3-50
ஆண்டுக் கட்டணம்	ரூ.	36-00	72-00
வாழ்நாள் கட்டணம்	ரூ.	250-00	600-00

—: வேண்டுகோள் :—

தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப்பெறுகின்றன கட்டுரைகள் ஆறு பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருக. இருவரி இடைவெளியிட்டு, தட்டச்சிட்டு இருபடிகள் அனுப்புக வெளியிடப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா.

காலந்தோறும் ஆயுதங்கள்

முனைவர் ச. சௌந்திரபாண்டியன், எம்.ஏ., எம்.ஏ.,
பி.எட்., டிப்.வ.மொ., பி.எச்.டி.,
காப்பாட்சியர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னை – 5.

மனித வாழ்வில் ஆயுதம் (Weapon) என்பது தவிர்க்க இயலாத கூறாக உள்ளது. ஆயுத பலத்தால் முடியரசுகள் வீழ்ந்த வரலாற்றை நாமறிவோம். ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து இங்கு வந்த வெள்ளையர்கள் நம் மண்ணைப் பிடிக்க முடிந்தது என்றால், அதற்கு அவர்களின் துப்பாக்கி என்ற ஆயுதமே காரணம் ! ஆங்கிலேயர்களின் துப்பாக்கி ஆயுதத்தை எதிர்க்க இயலாமல்தான், புலித்தேவனும், வீரபாண்டிய கட்டபொம்மனும், ஊமைத்துரையும், மருதிருவரும், தீரன் சின்னமலையும் மாண்டுபோனார்கள்.

இந்தியாவின் ஏனைய பாகங்களில் ஆட்சிபுரிந்த திப்பசுல்தான் (கி.பி.1799இல் வெல்லெஸ்லியால் கொல்லப்பட்டார்) போன்றவர்களும் வெள்ளையர்களை எதிர்க்க இயலாமல் போனதற்கு, வெள்யைர்கள் கொண்டு வந்த துப்பாக்கிதான் காரணம்! இத்தகைய ஆயுத மரபைச் சற்றுப் பின்னோக்கி ஆயலாம். ஆதிமனிதன் கல்லையே (Stone) ஆயுதமாக வைத்திருந்தான். அதன்பிறகு, அங்கமிங்கும் விழுந்து கிடந்த கழியை (Stick) ஆயுதமாக வைத்துக் கொண்டான் என் ஊகிக்க இடமுண்டு.

கற்காலத்தின் பின், செம்புக் காலம் (Copper age) இரும்புக்காலம் (Iron age) என்ற உலோகக் காலம் (meta age) தொடங்கியதால், செம்பு, இரும்பு இவற்றாலான சிறிய மற்றும் நீண்ட கத்திகளை (knife and swords) உபயோகித்திருப்பான்.

உலோகக் கத்தியை மனதன் பயன்படுத்தத் தொடங்கியபோது, அதற்கு முன்பு பயன்படுத்தப்பட்டு வந்த கல்லாயுதத்தை நம்பியிருக்க எத்தனையோ பேர்களை அவன் அழித்து ஒழித்திருப்பான். எத்தனையோ பேர்களை அவன் இடமிட்டு ஒட்டியிருப்பான்!

உலோகத்தினை உபயோகப்படுத்திக் கோடாரி (axe) என்ற ஓர் ஆயுதமும் செய்யப்பட்டது. இது மிகவும் வலிமை வாய்ந்ததாக ஒரு காலத்தில் இருந்திருக்கவேண்டும். கோடரியை பயன்படுத்தியே பரசுராமன் , இந்தியாவின் பலபாகங்களிலும், சத்திரியவம்சம் என்ற ஒன்று இல்லாமலே செய்து விட்டான் என எடுத்துக்கொள்ளப் புராணங்களில் சான்றுகள் உள.

அதைப்போலவே, வில்லும் அம்பும் (Bow and arrow) கருதத்தக்கது ! தூரத்திலிருந்து ஒருவனை அடித்த இந்த வில்லாயுதம் பல முடிமன்னர்கள் வீழக் காரணமாயிற்று! இராவணன் வீழக் காரணமாக இருந்தது. இராமன் கை வில்லம்பே ! சிறுவகை வில்லம்புகளை ஏழைவேடர்கள் பயன்படுத்த, பெரிய தாக்குதலைச் செய்யக்கூடிய

வலுவான வில்லம்புகளை அரசர்கள் செய்து, போர்களை எளிதில் சந்தித்தனர் என்று கருதவேண்டும். வில்லின் முன்னால், அருகிலிருந்து தாக்கக்கூடிய கழி, கத்தி முதலிய ஆயுதங்கள் பயனற்று நின்றன எனல்வேண்டும்.

சூலாயுதம் என்ற ஒன்றையம் நாம் கருதவேண்டும். நீளமான தண்டையும், மூன்று குத்தீட்டிகளையும் கொண்ட இந்தச் சூலாயுதம் மிகவும் வலுவானதாக இருந்திருக்க வேண்டும்.

சிவபெருமான் இந்த ஆயுதத்தால் பலரை வென்று வாகை சூடியிருக்க வேண்டும். முப்புரத்தை அவன் வென்றதற்கு இச்சூலாயுதமே காரணமாக இருந்திருக்கலாம். அதனால்தான், சூலாயிதத்தை நட்டு வணங்கும் ஒரு பழக்கம் தோன்றியது என்றுகூடக் கருத இடமிருக்கிறது.

வேலாயுதமும் இவ்வாறு மதிக்கத்தக்கதே. பலவெற்றிகளை முருகவேளுக்கு இந்த வேலாயுதமே தேடித்தந்தது என்று கருதலாம். சூரபத்மனை, முருகன் ஒழித்ததற்கு வேல் எனும் ஆயுதமே அவனுக்குப் பயன்பட்டது எனலாம். பல வெற்றிகளைத் தந்ததால்தான் வேலைச் சொல்லும் போது "வெற்றிவேல்", "வீரவேல்" என்றெல்லாம் கூறும் மரபு எழுந்தது என்று கருதல் தகும்.

மகாபாரதக் காலத்தில், கதை எனும் ஆயுதமும் செல்வாக்குடன் திகழ்ந்தது என்று கருதவேண்டும். வீமன், அனுமன் முதலியோருக்கு இக் கதாயுதமே நன்கு கைகொடுத்தது, பல எதிரிகளை ஒழிக்க உதவிற்று

எனக் கருதல் தவறலாகாது. இவ்வாறு, காலந்தோறும் ஆயுதம் என்பது ஒன்றையொன்று மிஞ்சுவதாக இருந்துவந்துள்ளது. வலுவான—சக்தியுள்ள ஆயுதம் பெற்றோர் வெற்றிபெறவும் ஏதுவானது.

இன்று கண்டுபிடிக்கப்படும் இராக்கெட் (rocket) துப்பாக்கியை ஒன்றுமில்லாமல் செய்யக்கூடியது! இருந்த இடத்தில் இருந்து கொண்டே பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு நாடு முழுவதையுமே அழித்துவிடக்கூடிய ஆற்றல் உள்ளது ! துப்பாக்கி அதன்முன் என்ன செய்ய இயலும் ?

இவ்வாறு ஆதிமனிதன் காலத்திலிருந்து இன்றுவரை ஆராய்ந்தால், காலந்தோறும் ஆயுதம் மாறிவந்த வகையும், அதனால் மனிதர்கள் வெவ்வேறு வகையில் துவண்டுபோன தன்மையும் நன்கு துலங்குகிறது.

இப்படிப்பட்ட ஆயுதத்தை நல்லவழியில் பயன்படுத்திக்கொள்ள மனிதன் அறிந்து கொள்ள வேண்டும்.

******

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. நா. கலியமூர்த்தி,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு. ச. இராமநாதன்,
முன்னாள் தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்

திரு. த.கோ.ப. கோவிந்தசாமி, பி.காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு. கலைமாச்செல்வர் எஸ் டி காசிராஜன் ஐ.ஏ.எஸ்.,
முன்னாள் அரசுச் செயலாளர், சென்னை.

திரு. சிலம்பொலிசு.செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி.
சென்னை

திரு. முனைவர். கி. கருணாகரன்,
துணை வேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு. முனைவர். தமிழண்ணல் எம்.ஏ., பிஎச்.டி.,
மதுரை - 625 020.

திரு. முனைவர். மு. கோவிந்தராசன்,
சென்னை:

திரு. முனைவர். சோ.ந. கந்தசாமி, எம்.ஏ., பி.லிட்., பிஎச்.டி.
முன்னாள் இலக்கியத்துறைத் தலைவர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு. முனைவர். மா. இராமலிங்கம், எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

திரு. தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை, பி.ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

திரு. முனைவர் ஈரோடு தமிழன்பன், எம்.ஏ., பிஎச்.டி.,
சென்னை.

திரு. பேராசிரியர் பி. விருத்தாசலம், எம்.ஏ.,
முன்னாள் முதல்வர், த.உ.க. கலைக்கல்லூரி.

திரு. முனைவர். இரா. குருநாதன்,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி.

திரு. புலவர் செ. இராசு, எம்.ஏ.,
இணைப்பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

திரு. புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
துணை முதல்வர், த.உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு. புலவர் மீனா. இராமதாசு, எம்.ஏ., எம்.எட்.,
முன்னாள் தலைமைத் தமிழாசிரியர், உ. மே. நி. பள்ளி

திரு. முனைவர். பா. மதிவாணன், எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர், த.உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு முனைவர் சி. சௌந்திரபாண்டியன் அவர்கள்

காப்பாட்சியர்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள்

நூலகம்,

சென்னை – 5

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ	100	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	,,	80	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)		60	00
இராசராசசோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	,,	6	00
பரணர் - ஆசிரியர். ஔவை சு துரைசாமிப்பிள்ளை	,,	35	00
பாயிர விருத்தி - ஆசிரியர் அரசஞ், சண்முகனார்	,,	60	00
அறிவியல் தமிழ்	,,	125	00
எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர்	,,	100	00

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சல் செலவு தனி

வெளியிடுபவர் : திரு. நா. கலியமூர்த்தி தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002

அச்சிடுபவர் : இரா. வைஜெயந்திமாலா, லக்ஷ்மி பிரிண்டர்ஸ்,
1086, காக்கா வட்டாரம் தஞ்சாவூர்-613009